## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 60/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | K.R.மணி | நாள் | 08.02.2023 |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | | |

**1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

16) என் தந்தை வழி பாட்டனாராருடன் சேர்ந்து கிரயம் பெற்ற நாச்சியப்ப கவுண்டருக்கு சேரவேண்டிய 6 ஏக்கர் 20 செண்ட் நிலமானது அவரது ஒரே மகனான செல்லப்பனுக்கு வாரிசுரிமை அடிப்படையில் சென்றது என்றால், இல்லை. நாச்சியப்ப கவுண்டர் காலத்தில் இருந்து அனுபவத்தில் இருந்ததன் அடிப்படையில் செல்லப்ப கவுண்டருக்கு 5 ஏக்கர் 80 செண்ட் நிலம் தான் சென்றது.

17) பதிவு செய்யப்பட்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் நாச்சியப்ப கவுண்டர் மகன் செல்லப்ப கவுண்டருக்கு 6 ஏக்கர் 20 செண்ட் நிலம் சென்றுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி செல்லப்ப கவுண்டருக்கு திருமணம் ஆகவில்லை என்றாலும், அவருக்கு குழந்தைகள் இல்லை என்றாலும், சரிதான்.

18) செல்லப்ப கவுண்டருக்கு உடன் பிறந்த 3 சகோரிகள் உள்ளனர் என்றால், சரிதான். அவர்களில் சின்னப்ப கவுண்டர் மனைவி நாச்சம்மாள் மூத்த சகோதரி என்றாலும், இரண்டாவது சகோதரியின் பெயர் குப்பாயம்மாள் என்றாலும், மூன்றவாது சென்னியப்ப கவுண்டர் மனைவி செல்லம்மாள் என்றாலும், சரிதான்.

19) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 கிரய பத்திரத்தில் பத்தாவது தாளில் ச.எண்.276/1ல் 0.54 செண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 கிரய பத்திரத்தின் அடிப்படையில் என் மைத்துனர் தேவராஜ், என் மாமியார் பழனியம்மாள் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால், சரிதான்.

20) வா.சா.ஆ.4 கிரய பத்திரத்தில் ச.எண்.276/1ல் 0.54 செண்டுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் ச.எண்.276/1ல் 0.55 செண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். உட்பிரிவு செய்யாமல் கூட்டாக இருந்த நிலம் நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் போது உட்பிரிவு செய்யப்பட்டதால் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம்.

21) வா.சா.ஆ.4 கிரய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகிய இரண்டிலும் ச.எண்.276/1ல் ஏதேனும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ஆனால் மேற்படி ச.எண்.276/1 ஐ ஒட்டியுள்ள இதர நிலங்கள் எங்களுடையது.

22) மேற்படி வா.சா.ஆ.4 கிரய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகிய போலி ஆவணங்களின் அடிப்படையில் என் மனைவி ராஜாத்திமணியின் பெயருக்கு வா.சா.ஆ.6 தானசெட்டில்மெண்ட் பத்திரம் போலியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

23) மேற்படி வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 வரையிலான போலி ஆவணங்களின் அடிப்படையில் வா.சா.ஆ.7 கணிணி பட்டா ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 வட்டாட்சியரின் அறிக்கை பக்கம் 2ல், என் மைத்துனர், என் மாமியார் மற்றும் என் மனைவி ஆகிய மூவரும் சேர்ந்து போலி ஆவணங்களின் அடிப்படையில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் சொத்தை அபகரித்துள்ளதாக வட்டாட்சியர் தன் விசாரணை அறிக்கையில் கூறியுள்ளார் என்றால், மேற்படி அறிக்கை தவறானது. அதற்கு எதிராகத்தான் தற்போது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

24) வா.சா.ஆ.8 கந்தாய ரசீது, வா.சா.ஆ.9 அடங்கல் ஆகியவை வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான போலி ஆவணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை என்றால், சரியல்ல. மேற்படி ஆவணங்களுக்கு எதிராகத்தான் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு அதற்காக

விசாரணைக்கு ஆஜராகுமாறு எனக்கு அழைப்பாணை வா.சா.ஆ.10 வழங்கப்பட்டுள்ளது என்றால், சொத்து என் மனைவிக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில் அழைப்பாணை எனக்கு தவறாக அனுப்பப்பட்டுள்ளது.

25) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.22 மாதிரி வரைபடத்தை எந்த அரசு அலுவலகத்திலும் தயாரிக்கவில்லை என்றால், அது எங்களால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால், வழக்கு நிலுவையில் இருக்கும்போது அரசு அலுவலர்கள் தயாரிக்க இயலாது என்பதால் தனி நிலவையரை வைத்து தயாரித்து இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்.

26) மேற்படி வா.சா.ஆ.22ல் ச.எண்.265/1 ஆனது நிலவியல் பாதை என்றாலும், மேற்படி நிலவியல் பாதை 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றாலும், சரிதான். மேற்படி வா.சா.ஆ.22ல் அதில் கண்டுள்ள அனைத்து சர்வே எண்களில் உள்ள நிலங்களையும் சேர்த்து 4 ஏக்கர் 53 செண்டுகள் என்றாலும், அதில் ராஜாத்திமணியும், கே.ஆர் மணியும் விவசாயம் செய்து வருவதாக எழுதியுள்ளது என்றால், சரிதான்.

27) மேற்படி ச.எண்.265/1 ஆனது நிலவியல் பாதையும் சேர்த்து தான் 4 ஏக்கர் 53 செண்டு நிலத்திற்குள் வருகிறது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.14 வட்டாட்சியரின் விசாரணையின் அறிக்கையின் படி தாவா சொத்திற்கு உண்மையான உரிமையாளர்கள் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள்தான் என தெளிவாக தெரிகிறது என்றால், அது தவறானது.

28) வா.சா.ஆ.17 முதல் வா.சா.ஆ.30 வரையிலான ஆவணங்களுக்கிடையேயான 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் மேட்டூர் சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்துள்ளனர் என்றாலும், மேற்படி மேல்முறையீட்டில் விசாரணை நடத்தனால் உண்மை தெரிந்துவிடும் என்பதால், இவ்வழக்கை நான் அவசரகதியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

29) இவ்வழக்கில் என் மனைவியை சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால், என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லாததால் நான் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் என்னை பொது அதிகார முகவராக விசாரித்துக்கொள்ள நீதிமன்ற அனுமதி பெறவில்லை என்றால், சரியல்ல.

30) தற்போது என் மனைவியின் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கோ அல்லது அதற்கு முந்தைய ஆவணங்களுக்கோ எவ்வித மூல ஆவணமும் இல்லை என்றால், சரியல்ல. 1946 ம் வருடத்திலிருந்து ஆவணங்கள் உள்ளது.

31) அ.வ.எண்.49/2010 என்ற வழக்கை இவ்வழக்கின் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் எனக்கும், என் மனைவிக்கும், என் மைத்துனர், என் மாமியார் மற்றும் சிலருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வழக்கில் எங்கள் சொத்தை ஏமாத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்டது.

32) தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர்கள் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் என்பதால் இவ்வழக்கில் நானும், என் மனைவியும் உண்மையான உரிமையாளர்களான 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கேட்க இயலாது என்றால், சரியல்ல.

(5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.